National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 12 February 2015

# ‘10ல் மூன்று அரசியல் வலைத்தளக் கருத்துகள் பாரபட்சமானவை’

பத்தில் மூன்று அரசியல் வலைப்பதிவுகள் ஒரு பக்கக் கருத்துகளையே வெளியிடுவதாக கொள்கை ஆய்வுக் கழகம் கண்டுபிடித்துள்ளது. கூட்டணியைப் பொருட்படுத் தாமல் அதிக அரசியல் கருத்துகளைக் கொண்டுள்ள வலைப்பதிவுகள் ஆழ்ந்த நோக்கமுடையவையாக இருப்பதாக நேற்று ஒரு கருத்தரங்கில் தங்கள் கருத்துகளைப் படைத்த கொள்கை ஆய்வுக் கழகப் பகுப்பாய்வுக் கல்வியாளர்களான டான் டார்ன் ஹவ், கரோல் சூன். அரசு குறித்து கருத்துத் தெரிவிப்பவர்கள் அரசுக்கு எதிரான கருத்துக்களையும் எதிர்க்கட்சி குறித்து கருத்துத் தெரிவிப்பவர்கள் அதற்கு மிகவும் சாதகமான கருத்துகளையும் முன்வைக்கின்றனர் எனவும் அவர்கள் சுட்டினர். தங்கள் ஆய்வுகளை மேற் கொண்டபோது பல எல்லைகளை வரையறுத்துக்கொண்ட தாக அவர்கள் குறிப்பிட்டனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.